101. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாகப் பொருந்தி உள்ளது?

| | | | |
|---|---|---|---|
| 1. | கிரிகார் மெண்டல் | - | நியூரோஸ்போரா |
| 2. | T.H. மார்க்கன் | - | டிரோசோ∴பில்லா |
| 3. | C.B. பிரிட்ஜஸ் | - | தோட்டப்பயறு |
| 4. | J.H. முல்லர் | - | எலிகள் |

(A) 1 **(B) 2** (C) 3 (D) 4

102. (x + y)2 + 9(x + y) + 8 ன் காரணிகள்

(A) (x+y + l)(x + y) **(B) (x + y+l)(x + y + 8)**

(C) (x + y + l)(x + y + 6) (D) (x + y + 8)(x + y + 2)

103. முதல் ‘n’ ஒற்றை இயல் எண்களின் கூடுதலுக்கும் முல் ‘n’ இயல் எண்களின் கூடுதலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

(A) $\frac{n}{2}+1$ **(B)** $\frac{n(n-1)}{2}$

(C) $\frac{n(n+1)}{2}$ (D) $\frac{n(n+1)(2n+1)}{6}$

104. வைக்கம் சத்தியாகிரகத்தை தொடங்கிய மூன்று தலைவர்கள் அவர்களாவது

(A) தி. பிரகாசம், தி.கே. மாதவன் மற்றும் கே.பி. கேசவ மேனன்

**(B) டி. கே. மாதவன், கே.பி. கேசவமேனன் மற்றும் ஜார்ஜ் ஜோசப்**

(C) ஜார்ஜ் ஜோசப், தி பிரகாசம் மற்றும் தி.கே. மாதவன்

(D) கே.பி. கேசவ மேனன், தி. பிரகாசம் மற்றும் ஜார்ஜ் ஜோசப

105. "நவீன இந்தியாவின் தந்தை" என்றழைக்கப்படுபவர் யார்?

(A) அம்பேத்கார் (B) E:V.R "பெரியார்"

(C) காந்தியடிகள் **(D) ராஜாராம் மோகன் ராய்**

106. வாணிப நடவடிக்கையில் முற்றுரிமை தடைச்சட்டம் (MRTP Act), 1969 ஆனது ரத்து செய்யப்பட்டு போட்டிச் சட்டம் 2002-ற்கு இக்காலத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

(A) 2002 **(B) 2009** (C) 2013 (D) 2016

107. S.N. அகர்வாலா உருவாக்கிய காந்தியத் திட்டத்தின் அடிப்படை நோக்கமானது

(A) வேளாண்மை வளர்ச்சி

(B) குடிசை மற்றும் கிராமிய தொழிலகங்களின் வளர்ச்சி

(C) சமத்துவத்தை அடைவது

**(D) ஒட்டுமொத்த இந்தியாவின் மூலம் மற்றும் கலாச்சார நிலையினை உயர்த்துதல்**

108. இந்திய திட்டக்குழுவின் இறுதியான துணைத்தலைவர்

(A) மன்மோகன் சிங் (B) நரேந்திர மோடி

(C) அருண் ஜேட்லி **(D) மான்டேக் சிங் அலுவாலியா**

109. இந்தியாவில் நீதிப்புனராய்வு அதிகாரம் வரையறைக்குட்பட்டது. ஏனெனில்

(A) செயல்துறை உயர்வானது (B) சட்டத்துறை உயர்வானது

**(C) அரசியலமைப்பு உயர்வானது** (D) நீதிபதிகள் இடமாறுதலுக்கு உட்பட்டவர்கள்

110. இந்திய அரசாங்கம் பாரத் ரத்னா மற்றும் பத்மஸ்ரீ விருதுகளை ________ விதியின் கீழ் உருவாக்கியுள்ளது.
(A) இந்திய அரசியல் சட்ட விதி - 14
**(B) இந்திய அரசியல் சட்ட விதி - 18**
(C) இந்திய அரசியல் சட்ட விதி - 25
(D) இந்திய அரசியல் சட்ட விதி - 32

111. மணிப்பூரின் இரும்பு பெண்மணி இரோம் சஷர்மிளா, 2017 மணிப்பூர் மாநில சட்டமன்ற தேர்தலில் பெற்ற வாக்குகள் எத்தனை?
(A) 10 வாக்குகள்
(B) 30 வாக்குகள்
(C) 60 வாக்குகள்
**(D) 90 வாக்குகள்**

112. எந்த மாவட்டத்தில் புதிய பல் மருத்துவக் கல்லூரி 2017-ஆம் ஆண்டில் தொடங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்?
(A) சென்னை
(B) தருமபுரி
**(C) விருதுநகர்**
(D) புதுக்கோட்டை

113. எந்த ஒரு மாநில அரசு இந்த நிதி ஆண்டிலிருந்து (ஏப்ரல் 1 - மார்ச் 31) காலண்டர் ஆண்டிற்கு (ஜனவரி 1 - டிசம்பர் 31)-க்கு மாற்றியுள்ளது?
(A) கேரளா
**(B) மத்திய பிரதேசம்**
(C) பஞ்சாப்
(D) மேற்கு வங்கம்

114. ஊடுருவல் மின்னணு நுண்ணோக்கியில் (TEஆல்) ________________ பொருட்களை பெரிதுபடுத்தப் பயன்படுகிறது.
(A) ஒளி
(B) ஆப்டிகல் லென்ஸ்கள்
**(C) எலக்ட்ரான்கள் (மின்னணுக் கதிர்கள்)**
(D) ஸ்கேனர்

115. குளுக்கோசின் சுவாச ஈவு மதிப்பு
(A) 0.5 **(B) 1.0** (C) 1.5 (D) 2.0

116. 36 வினாடி என்பது ஒரு மணியில் எத்தனை சதவீதம் ஆகும்?
(A) 6% **(B) 1%** (C) 10% (D) 36%

117. $\left(\frac{x^m}{x^n}\right)^{m+n} \left(\frac{x^n}{x^l}\right)^{n+l} \left(\frac{x^l}{x^m}\right)^{l+m} = \ldots\ldots$

**(A) 1** (B) – 1 (C) $x^{m+n+l}$ (D) $\frac{1}{x^{m+n+l}}$

118. x, y இவற்றின் மீ.பொ.ம z எனில் x, y ன் மீ.பொ.வ. என்ன?
**(A) $\frac{xy}{z}$** (B) $\frac{xz}{xy}$ (C) $\frac{yz}{x}$ (D) xy

119. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் கூட்டத் தொடரில் கலந்து கொண்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை
(A) 25 (B) 100 **(C) 72** (D) 2000

120. புரட்சிகரமான தேசியவாதி நீலகண்ட பிரம்மச்சாரி பிறந்த இடம்
(A) திருநெல்வேலி
(B) மதுரை
**(C) சீர்காழி**
(D) சென்னை

121. மிகச்சிறிய மெர்க்குரி கோளானது சூரியனை சுற்றி வர 88 நாட்கள் மட்டுமே ஆகின்றது. ஏனெனில்
(A) அதன் அளவு
(B) சுழலும் வேகம்
**(C) சூரியனிடமிருந்து உள்ள தூரம்**
(D) அதன் மெல்லிய வளிமண்டலம்

122. பின்வரும் பேரிடர்ப்பாடுகளை அதன் வகைப்பாட்டோடு பொருத்தி விடை காண்க.
(a) பனிப்புயல் — 1. நீரியல் பேரழிவு
(b) ஆழிப்பேரலை — 2. சுகாதார பேரழிவு
(c) அணுவிபத்து — 3. வளிமண்டல பேரழிவு
(d) தொற்றுநோய் — 4. மானுட பேரழிவு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| **(D)** | **3** | **1** | **4** | **2** |

123. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 370 படி ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்றம் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநில தொடர்புடைய சட்டங்கள் இயற்றுவது
**(A) பட்டியல் I மற்றும் III (ஏழாவது அட்டவணை)**
(B) பட்டியல் I (ஏழாவது அட்டவணை) மட்டும்
(C) பட்டியல் II (ஏழாவது அட்டவணை) மட்டும்
(D) பட்டியல் I, II மற்றும் III (ஏழாவது அட்டவணை)

124. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கைகள் இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் புனிதமானவையாக ஏற்கப்பட்டமைக்கு தூண்டுதலாக இருந்தது எது?
(A) அமெரிக்க விடுதலைப் பிரகடனம்
**(B) பிரெஞ்சுப் புரட்சி**
(C) ரஷ்யப் புரட்சி
(D) ஐ.நா. சாசனம்

125. இந்திய ஜனாதிபதி தேர்தல், 2017-க்கான தேர்தல் கல்லூரியின் மொத்த வாக்குகளை கண்டுபிடி.
(A) 11,00,346 வாக்குகள்
**(B) 11,04,546 வாக்குகள்**
(C) 12,06,232 வாக்குகள்
(D)13,00,346 வாக்குகள

126. நீண்ட காலத் திட்டம் 2023-ல் கீழ்க்கண்டவைகளில் எது முக்கிய நோக்கமாக கருதப்படுகிறது?
**(A) வேலைவாய்ப்பை உருவாக்குதல்**
(B) எண்மத் தொழில் நுட்பம்
(C) விருது
(D) சன்மானம்

127. எரிபொருள் இயக்கம் என்பது மாறாத ____________ கொண்ட கிடைமட்ட இயக்கம் மற்றும் மாறாத ______________ கொண்ட செங்குத்து இயக்கம் ஆகியவற்றின் கலவை ஆகும்.
(A) முடுக்கம், திசைவேகம் **(B) திசைவேகம், முடுக்கம்**
(C) இடப்பெயர்ச்சி, திசைவேகம் (D) திசைவேகம், இடப்பெயர்ச்சி

128. அணுக்கரு விசையானது
(A) மின்னூட்டத்தைச் சார்ந்துள்ளது
(B) சுழற்சியை சார்ந்திராது
(C) மின்னூட்டம் மற்றும் சுழற்சியை சார்ந்திராது
**(D) சுழற்சியை சார்ந்துள்ளது ஆனால் மின்னூட்டம் சார்ந்திராது**

129. நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் சிலவற்றின் மீது வரி விதிக்கப்படுகின்றது. இது மைய அரசுக்குச் செல்கின்றது. அந்த வரி
(A) நேர்முக வரி (B) மறைமுக வரி
**(C) கலால் வரி** (D) சேவை வரி

130. $\frac{X^2-2X}{X^2+2X} \; X \; \frac{3X+6}{X-2}$-ன் மதிப்பு
(A) 3x **(B) 3** (C) 3x + 2 (D) x – 2

131. பின்வருவனவற்றுள் எது சரியான ஏறுவரிசையில் அமைந்துள்ளது?
**(A) 25% of 8, 40% of 6, 30% of 9, 20% of 15**
(B) 20% of 15, 25% of 8, 30% of 9, 40% of 6
(C) 30% of 9, 40% of 6, 25% of 8, 20% of 15
(D) 20% of 15, 30% of 9, 40% of 6, 25% of 8

132. பின்வருவனவற்றுள் பரப்பளவில் பெரியது எது?
(A) அடிப்பக்கம் 10 செ.மீ. உயரம் 8 செ.மீ. கொண்ட முக்கோணம்
(B) 12 செ.மீ., 5 செ.மீ மற்றும் 13 செ.மீ. பக்கங்கள் உள்ள முக்கோணம்
**(C) 10 செ.மீ. பக்கம் உள்ள சமபக்க முக்கோணம்**
(D) செங்கோணத்தை உள்ளடக்கிய பக்கங்கள் 3 செ.மீ. மற்றும் 4 செ.மீ. உள்ள முக்கோணம்

133. தம்மபாணி எவ்விடத்தின் பழைய பெயர்?
(A) தமிழ்நாடு (B) கேரளம் **(C) ஸ்ரீலங்கா** (D) கர்நாடகம்

134. "பாராளுமன்றத்தின் தலைசிறந்த நபர் விவேகானந்தர்" என்று குறிப்பிட்ட பத்திரிக்கையின் பெயர்
(A) யங் இந்தியா (B) சமாச்சர் தர்பன்
(C) சுதேசி மித்ரன் **(D) நியூயார்க் ஹெரால்ட்**

135. பெண்களின் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பிற்கான ஆதரவு (STEP) என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
**(A) 1986 – 87** (B) 1990 - 91
(C) 1995 – 96 (D) 1996 – 97

136. இந்திய பிரதமரால், மே 26, 2017-ம் நாள் இந்தியாவிலேயே மிகவும் நீளமான சாலைப் பாலம் திறந்து வைக்கப்பட்டது. அது எந்த இரு மாநிலங்களை இணைக்கின்றது?
**(A) அஸ்ஸாம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம்**
(B) அஸ்ஸாம் மற்றும் மணிப்பூர்
(C) அஸ்ஸாம் மற்றும் திரிபுரா
(D) மணிப்பூர் மற்றும் திரிபுரா

137. தீவிர மாவட்ட வேளாண் திட்டம் தொடர்பான முதல் படிநிலை இந்த ஆண்டு துவங்கப்பட்டது.
(A) 1951-52 **(B) 1960-61** (C) 1965-66 (D) 1990-91

138. தமிழ்நாடு அரசின் "புது வாழ்வு திட்டம்" தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளில் எவை சரியானவை?
1. இத்திட்டம் 2005-ல் தொடங்கப்பட்டது
2. உலக வங்கி இதற்கு நிதி உதவி வழங்குகிறது
3. இதற்கான திட்டசெலவு 1,667 கோடி ரூபாய்
4. தமிழ்நாட்டில் 26 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது
**(A) அனைத்து கூற்றுகளும் சரி**
(B) (1), (2) மற்றும் (3) சரியானவை
(C) (2), (3) மற்றும் (4) சரியானவை
(D) (1), (2) மற்றும் (4) சரியானவை

139. தமிழ்நாட்டில் எவ்வளவு சதவீதத்தில் மொத்த பயிர் சாகுபடிப் பரப்பில் மானாவாரிப் பகுதியில் பயிரிடப்படுகிறது?
(A) 55% (B) 57% **(C) 54%** (D) 52%

140. இந்திய நியூட்ரினோ ஆய்வுக்கூடம் தமிழகத்தின் எந்த மாவட்டத்தில் உள்ளது?
(A) மதுரை **(B) தேனி** (C) கடலூர் (D) சென்னை

141. கீழ்க்கண்ட பொருத்தங்களில் பண்புகளின் அடிப்படையில் எது தவறான பொருத்தமாகும்?
(A) கணையம் - குளுக்ககான்
(B) சிறுகுடல் - ஸ்டோமட்டோஸ்டேடின்
**(C) விந்தகம் - ஈஸ்ட்ரோஜென்**
(D) அட்ரீனல் சுரப்பி - குளுக்கோகார்டிகாய்ட்ஸ்

142. கீழ்க்கண்டவற்றுள் எந்த ஹார்மோன் கருப்பையின் மெது தசைகளைச் சுருக்க உந்துகிறது?
(A) எபிநெப்ரின் (B) இன்சுலின் **(C) ஆக்ஸிடோசின்** (D) குளுக்ககான்

143. A என்பதனை + எனவும், B என்பதனை + எனவும், C என்பதனை × எனவும் > D என்பதனை - எனவும் கொண்டால் of $\frac{1}{5}C2B\frac{1}{5}D\frac{1}{10}=?$
**(A) 2.1** (B) 1.2 (C) 2.5 (D) 1.6

144. $\frac{X^3-1}{X+3} \div \frac{X^2+X+1}{3X+9}$ -ன் மதிப்பு?
(A) 3x-l (B) 3(x + l) **(C) 3(x-l)** (D) 3x + 2

145. பின்வருவனவற்றை கால வரைமுறைப்படுத்துக.
1. செங்குட்டுவன் 2. இமயவரம்பன்
3. கணைக்கால் இரும்பொறை 4. குட்டுவன் சேரல்
**(A) 2, 1, 4, 3** (B) 4, 2, 3, 1 (C) 2,1,3,4 (D) 3,2,4,1

146. சோழ நாட்டில் வருவாய் துறை எவ்வாறு அழைக்கப்பட்டது?
(A) பெருந்தாரம் (B) உடன் கூட்டம் **(C) புரவுவரி** (D) ஓலை நாயகம்

147. இந்திய மக்களின் உடல் நிலையில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், சில காரணங்களால் எதிர்மறை போக்கு காணப்படுகிறது. மேற்கூறியவற்றிற்கு, பின்வருவனவற்றில் சரியான விடைகளைக் குறிப்பிடுக.
1. HIV/AIDS கிராமப்புறங்களில் அதிகமாக உள்ளதால்
2. HIV/AIDS நகர்ப்புறங்களில் அதிகமாக உள்ளதால்
3. இதயநோய் மற்றும் கேன்சர் கிராமப்புறங்களில் அதிகமாக உள்ளதால்
4. இதய நோய் மற்றும் கேன்சர் நகர்ப்புறங்களில் அதிகமாக உள்ளதால்
(A) அனைத்தும் சரியானது (B) 1 மற்றும் 3சரியானது
(C) 1 மற்றும் 4 சரியானது **(D) 1, 3மற்றும் 4 சரியானது**

148. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று இந்திய அரசியலமைப்பு சட்ட விதிகள் 275 மற்றும் 282-ன் கீழ் வழங்கப்படும் மானியங்களுக்கு இடையேயான வேறுபாடுகள் தொடர்பாக சரியான ஒன்று அல்ல?
(A) விதி 275-ன் கீழ், வழங்கப்படும் மானிய உதவி சட்டப்படியானது. விதி 282-ன் கீழ் வழங்கப்படுவது விரிப்புரிமையானது.
(B) விதி 282-ன் கீழ், மத்திய அரசுக்கு திட்டம் சாரா செலவினங்களுக்கும் மானிய உதவி வழங்க அதிகாரம் உள்ளது
(C) விதி 275-ன் கீழ், நிதி ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் மானியங்களை வழங்கலாம்
(D) விதி 282-ன் கீழ் அமைச்சரவை குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் மானியங்களை வழங்கலாம்

ISO 9001 : 2015
SINCE : 2011

149. BSE's வர்த்தக புள்ளி 30,000 புள்ளிகள் என்ற வரலாற்று உயரத்தை முதன் முதலில் எந்த நாளில் எட்டியது?
(A) 26 டிசம்பர் 2016 (B) 26 ஜனவரி 2017
**(C) 26 ஏப்ரல் 2017** (D) 26 மே 2017

150. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO), முழுவதும் இந்தியாவில் உருவாக்கப்பட்ட கிரையோஜனிக் எந்திரத்தை வெற்றிகரமாக சோதனை செய்த நாள்
**(A) ஜனவரி 25, 2017** (B) ஜனவரி 30, 2017
(C) ஏப்ரல் 1, 2017 (D) மார்ச் 30, 2017

151. 7 செ.மீ. ஆரம் உள்ள அரை வட்டத்தின் பரப்பு
(A) 7 செ.மீ.$^2$ (B) 777 செ.மீ.$^2$
**(C) 77 செ.மீ.$^2$** (D) 7777 செ.மீ.$^2$

152. ஆக்சிஜனைக் கொண்டு $SO_3^{2-}$ முதல் $SO_4^{2-}$ ஆக்சிஜனேற்றம் செய்யும் கீழ்க்காணும் வினையில்,

$SO_3^{2-} + \ddot{O} \rightarrow SO_3^{2-}$, எது லூயிஸ் அமிலமாகவும் எது லூயிஸ் காரமாகவும் செயல்படுகிறது?

**(A) $SO_3^{2-}$ லூயிஸ் அமிலம் மற்றும் ஆக்சிஜன் லூயிஸ் காரம்**

(B) ஆக்சிஜன் லூயிஸ் அமிலம் மற்றும் $SO_3^{2-}$ லூயிஸ் காரம்

(C) இரண்டும் லூயிஸ் அமிலங்கள்

(D) இரண்டும் லூயிஸ் காரங்கள்

153. ஒரு பையனின் தற்போதைய வயது அவனது தங்கையின் வயதைப் போல இரு மடங்கு. 4 ஆண்டுகளுக்கு முன்பு அவனது வயது அவன் தங்கையின் வயதைப் போல மூன்று மடங்கு எனில், அவர்களது தற்போதைய வயது என்ன?

(A) 18, 9 (B) 14, 7 **(C) 16, 8** (D) 12, 6

154. $x^{3/2} : 9 = 16 : \sqrt{x}$. எனில் x இன் மதிப்பு என்ன?

(A) ±16 (B) ±3 (C) ±4 **(D) ±12**

155. 75 எண்களைக் கொண்ட ஒரு தொகுதியின் சராசரி 27 எனக் கணக்கிடப்பட்டது. பின்பு, 53 என்ற எண் தவறுதலாக 43 என்று படிக்கப்பட்டது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, அத்தொகுதியின் சரியான சராசரியைக் காணவும்.

(A) 26.13 **(B) 27.13** (C) 28.13 (D) 25.13

156. எத்தனை ஆண்டுகள் முடிவில் ஒரு குறிப்பிட்ட அசலானது 8% வட்டி வீதத்தில் மூன்று மடங்காகும்?

(A) 24 **(B) 25** (C) 20 (D) 12

157. பயிரிடக்கூடிய நிலங்கள் ஒன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை உழப்படாத பொழுது, அது இவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) பயன்பாடற்ற விளைநிலம்
(B) பாண்டு தரிசு
**(C) பிற தரிசு**
(D) நிலையான மேய்ச்சல் நிலம்

158. கங்கை - பிரம்மபுத்திரா அலையாத்திக் காடுகளில் முக்கியமாகக் காணப்படும் மரவகையானது

(A) ரொடோடென்ட்ரோன்ஸ்
**(B) கடின பனை வகை**
(C) லாரல்ஸ்
(D) ஜினிப்பர்

160. நாடாளுமன்ற அவை விதிகளின் படி, சபாநாயகர் அனுமதித்தால், ஒரு தீர்மானத்திற்கான அறிக்கையை தேதி குறிப்பிடாமல் கொண்டு வரலாம் - அப்படி கொண்டு வரும் தீர்மானத்திற்கு என்ன பெயர்?

(A) கவன ஈர்ப்பு தீர்மானம்
(B) ஒத்திவைப்பு தீர்மானம்
(C) நம்பிக்கையில்லா தீர்மானம்
**(D) தேதியில்லா, பெயர் சூட்டப்பட்ட தீர்மானம்**

161. இந்தியாவில் எந்த அமைப்பைச் சார்ந்த விஞ்ஞானிகள் தற்போது நீரிலிருந்து ஆற்றல் எதுவும் பயன்படுத்தாமல் மின்சாரம் உருவாக்க முடியும் என கண்டறிந்துள்ளார்கள்?

**(A) NPL, புது டெல்லி**
(B) IISC, பெங்களூரு
(C) USER, கொல்கத்தா
(D) IIT, சென்னை

162. டிசம்பர் 20, 2016-ல் பிரதம மந்திரி நாட்டின் முதன் முதலாக எந்த இடத்தில் இந்திய திறன் நிறுவனத்தை (IIS) துவக்கி வைத்தார்?

(A) அகமதாபாத் (B) பெங்களூரு
**(C) கான்பூர்** (D) வாரணாசி

163. சூப்பர் நோவா என்பது ஒரு வெடி விண்மீன். சாதாரண பார்வைக்கு புலப்பட்ட கடைசி இரண்டு சூப்பர் நோவா எந்த வருடங்களில் தெரிந்தது?

(A) 1600, 1980 (B) 1601, 1982
**(C) 1604, 1987** (D) 1605, 1997

164. E =hγ என்ற சமன்பாட்டை பயன்படுத்தி, பிளாங்க் மாறிலி 'h' -ன் பரிமாணத்தைக் கணக்கிடுக. இங்கு E→ஆற்றல், γ → அதிர்வெண்

(A) $MLT^{-1}$ **(B) $ML^2 T^{-1}$**
(C) $ML^{-1} T^{-2}$ (D) $ML^{-2}T^{-1}$

165. ஓர் உருளையின் அடிப்பாகம் வட்ட வடிவில் இல்லை எனில் அது எவ்வாறு அழைக்கப்படும்?

(A) வட்ட உருளை (B) நேர் வட்ட உருளை
(C) சாய்வு உருளை (D) ஒழுங்கற்ற உருளை

166. 10 மீ என்பது எதற்கு சமம்?

(A) 100 sq. cm. (B) 1000 sq. cm.
(C) 10000 sq. cm. **(D) 100000 sq. cm.**

167. எங்கு அகில இந்திய முஸ்லீம் லீக் 1906-ல் ஏற்படுத்தப்பட்டது?

(A) மும்பை (B) உத்திரப் பிரதேசம்
(C) சென்னை **(D) டாக்கா**

168. எப்பொழுது "சுதேசி நாள்" இந்தியாவில் கொண்டாடப்பட்டது?

(A) மே 27, 1932 (B) மே 28, 19332
**(C) மே 29, 1932** (D) மே 30, 1932

169. $x, x^{3/2}, x^2, x^{5/2}, \dots ?$ என்ற தொடர் வரிசையின் உறுப்பு என்ன?

(A) $x^{\frac{85}{2}}$ (B) $x^{\frac{45}{2}}$ **(C)** $x^{43}$ (D) $x^{44}$

**170.** The ஒரு கூம்பின் ஆரம் மற்றும் சாயுயரம் முறையே "$r$" மற்றும் "$l$" எனில் கூம்பின் கனஅளவு என்ன?

**(A)** $\frac{1}{3}\pi r^2\sqrt{l^2 - r^2}$ (B) $\frac{1}{3}\pi r^2\sqrt{l^2 + r^2}$

(C) $\pi r l$ (D) $\pi r(l + r)$

171. கீழ்க்கண்ட பொருத்தத்தில் பண்புகளின் அடிப்படையில் எவை சரியானவை?

| | |
|---|---|
| (a) தைராய்டு ஹார்மோன் | 1. குசிங்ஸ் நோய் |
| (b) இன்சுலின் | 2. மிக்ஸிடிமா |
| (c) கார்ட்டிகோஸ்டீராய்ட்ஸ் | 3. அக்ரோமெகாலி |
| (d) வளர் ஹார்மோன் | 4. நீரழிவு நோய் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| **(D)** | **2** | **4** | **1** | **3** |

172. பொருத்துக:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) P.A. சங்மா | 1. தெலுங்கு தேசம் கட்சி |
| (b) G.M.C. பாலயோகி | 2. சி.பி.ஐ. (மா) |
| (c) மனோகர் ஜோசுஷி | 3. சிவசேனா |
| (d) சோம்நாத் சட்டர்ஜி | 4. காங்கிரஸ் 1 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| **(B)** | **4** | **1** | **3** | **2** |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

173. ராஜீவ் காந்தி அறிவு சார் சொத்து உரிமை சட்டப்பள்ளி அமைந்துள்ளது ------------------ மாநிலத்தில்.
(A) சென்னை - தமிழ்நாடு
(B) உஜ்ஜயினி - மத்திய பிரதேசம்
(C) கொச்சின் - கேரளா
**(D) கார்க்பூர் - மேற்கு வங்காளம்**

174. கொடுக்கப்பட்டவைகளில் எந்த ஒன்று சரியாக பொருந்தாது?
(A) வாரிஸ்தா பென்சன் பீமா யோஜனா -வயதானவர்களின் சமூகபாதுகாப்பு
(B) பிரவேசி கௌஷல் விகாஸ் யோஜனா -வெளிநாட்டில் வேலைவாய்ப்பு தேடுவதற்கு
(C) PM பாசல் பீமா யோஜனா -விவசாயிகள் காப்புரிமை திட்டம்
(D) **PM கிராம சாடக் யோஜனா -கிராமப்புற பெண்கள் முன்னேற்றம்**

175. சுவாசித்தலில் சயனைட் எதிர்ப்புத்திறன் இவற்றில் காணப்படுகிறது.
(A) தாவரங்களில் மட்டும்
(A) விலங்குகளில் மட்டும்
(C) தாவரங்கள் மற்றும் விலங்குகளில்
**(D) தாவரங்கள் மற்றும் நுண்ணுயிரிகளில்**

176. ஆண் பாலின ஹார்மோன் "டெஸ்டோஸ்டீரோனை" உற்பத்தி செய்வது
**(A) லெய்டிக் செல்கள்**
(B) செர்டோலை செல்கள்
(C) ஜெர்மினல் எபிதீலியல் செல்கள்
(D) ஸ்பெர்மெட்டோகோனியல் செல்கள்

177. உள்ளீடற்ற அரைக் கோளத்தின் மொத்தப் புறப்பரப்பு =

(A) $2\pi(R^2 + r^2)$ ச. அலகுகள் (B) $2\pi(R^2 - r^2)$ ச. அலகுகள்

**(C) $\pi(3R^2 + r^2)$ ச. அலகுகள்** (D) $\pi(3R^2 - r^2)$ ச. அலகுகள

178. ஒரு லீப் வருடத்தில் 53 வெள்ளிக்கிழமை அல்லது 53 சனிக்கிழமைகள் வருவதற்கான நிகழ்தகவு காண்க

(A) 1/7 (B) 2/7 **(C) 3/7** (D) 4/7

179. பொருத்துக:

| | |
|---|---|
| (a) அன்னிபெசன்ட் | 1. கேசரி |
| (b) பிபின் சந்திரபால் | 2. காமன் வீல் |
| (c) பூபேந்திரப நாத் தத் | 3. நியூ ஆசியா |
| (d) திலக் | 4. யுகாந்தர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| **(D)** | **2** | **3** | **4** | **1** |

180. தவறான பொருத்தத்தை கண்டுபிடிக்கவும்?

(A) இந்திய ஐரோப்பிய குடும்பம் - ஆர்யா (B) ஆஸ்டிரிக் குடும்பம் - நிசாடா

(C) திராவிட குடும்பம் - திராவிடா **(D) சைனா திபெத்திய குடும்பம் - முன்டா**

181. ______________ லிருந்து இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கப்பட்டது.

(A) 1862ம் வருடம் **(B) 1872ம் வருடம்**

(C) 1882ம் வருடம் (D)1892ம் வருடம்

182. பஞ்சாயத்து அமைப்புக்களுக்கு அரசியலமைப்பு அந்தஸ்து முன் முயற்சிகள் எடுக்கப்பட்டது எந்த குழுவின் பரிந்துரையின் பெயரில்?

(A) G.V.K. ராவ் குழு **(B) L.M. சிங்வி குழு**

(C) அசோக் மேத்தா குழு (D) பல்வந்தராய் மேத்தா குழு

183. பின்வரும் இந்திய அரசியலமைப்பின் எந்த விதி உச்சநீதி மன்றத்திற்கு சிறப்பு அனுமதி மனுவினை ஏற்கும் அதிகாரத்தை வழங்குகின்றது?

**(A) விதி 136** (B) விதி 32 (C) விதி 139 (D) விதி 226

184. புது டில்லியில் 2017 ஆண்டு மார்ச் மாதத்தில் எந்த அமைப்பு க்யான் சங்கம் மாநாட்டினை [அறிவு உச்சி மாநாடு] நடத்தியது?

**(A) பிரஜ்னா பார்வா**

(B) கிறிஸ்துவ கல்வி கழகம்

(C) இந்திய இஸ்லாமிய மாணவர்கள் இயக்கம்

(D) இந்திய ஜனநாயக வாலிபர் அமைப்பு

185. பிரதம மந்திரி கிரிசஷன் சாய் யோஜனா திட்டத்தின் நோக்கம் என்ன?

(A) சுற்றுபுற சூழல் **(A) நிலத்தடி நீர் செறிவூட்டுதல்**

(C) துணி உற்பத்தி (D) இலவச உணவு

186. கீழே உள்ளவைகளில் எது பாஸ்பரஸ் உள்ள பூச்சிக்கொல்லி?
(A) DDT (B) BHC
(C) 2, 4-D **(D) பாராத்தியான்**

187. பொருத்துக:
(a) கலப்பு உரங்கள் 1. DAP
(b) சிக்கலான உரங்கள் 2. NPK
(c) உயிர் உரங்கள் 3. எண்ணெய் கேக்
(d) கரிம நைட்ரஜன் உரங்கள் 4. பாசி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| **(B)** | **2** | **1** | **4** | **3** |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

188. நிகழ்வெண் பலகோணம் வரைய ஒரு வழிகாட்டியாக (வரைய இருப்பது)
(A) நிகழ்வெண் **(B) நிகழ்வெண் செவ்வகம்**
(C) குவிவு நிகழ்வெண் (D) செவ்வகம்

189. 100 ஆட்கள் ஒரு வேலையை 7 நாட்களில் முடிக்கக் கூடும் எனில் அதே வேலையை 35 நாட்களில் முடிக்க எத்தனைப் பேர் தேவைப்படுவர்?
**(A) 20 ஆட்கள்** (A) 50 ஆட்கள்
(C) 30 ஆட்கள் (D) 25 ஆட்கள

190. 100, 95, 90, 85 என்ற தொடர்வரிசையின் 21வது உறுப்பு என்ன?
(A) 10 (B) 20 **(C) 0** (D) 5

191. சுருக்குக: $\dfrac{2x^4 - 162}{(x^2+9)(2x-6)}$

(A) $x^2 + 9$ **(B) $x + 3$** (C) $x + 6$ (D) $x - 6$

192. சோழ ___ சாளுக்கிய வழியில் வந்த முதல் அரசன் யார்?
(A) இரண்டாம் இராஜ இராஜன் (B) விக்ரம் சோழன்
**(C) முதலாம் குலோத்துங்கன்** (D) ஆதி ராஜேந்திரன்

193. கேரளாவில் வைக்கம் சத்தியகிரகம் நடைபெற்ற ஆண்டு
(A) 1918 **(B) 1924** (C) 1913 (D) 1928

194. பெரியார் நீதிக்கட்சியின் கருத்துகளை ஒன்றிணைத்து எந்த புதிய கட்சியை ஆரம்பித்தார்
**(A) திராவிட கழகம்** (B) திராவிட முன்னேற்ற கழகம்
(C) சுதந்திரா கட்சி (D) அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்

195. காந்திய முறை மற்றும் வளர்ச்சியின்படி இந்திய திட்டமிடல், கீழ்காண்பவற்றுள் எந்த மாற்றம் கோரப்படவில்லை?
(A) உற்பத்தி சார்ந்த திட்டமிடலுக்குப் பதிலாக, வேலை நோக்கான திட்டமிடல்
**(B) வேலை நோக்கான திட்டமிடலுக்குப் பதிலாக உற்பத்தி நோக்கான திட்டமிடல்**
(C) சிறிய மற்றும் குடிசைத் தொழிலகங்களுக்குச் சாதகமானது
(D) நுகர்பொருள் உற்பத்தி செய்யும் பெரிய தொழிலகங்களுக்கு எதிரானது

196. "மதச் சார்பின்மை" என்ற வார்த்தை, அரசியலமைப்பு சட்டத்தின் முகப்பு வரியில் இணைக்கப்பட்டதற்கு முன்னரே உச்ச நீதிமன்றம் "மதச் சார்பின்மை" அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை கூறுகளில் ஒன்று என்று கூறிய ஆண்டு எது?
(A) 1975 (B) 1973 **(C) 1976** (D) 1981

197. கொடுக்கப்பட்டுள்ளவைகளில் திறன் இந்தியா திட்டத்தின் தவறான குறிக்கோள் எது?
(A) நாடு முழுவதும் உள்ள இளைஞர்களின் திறனை மேம்படுத்தலே இதன் குறிக்கோளாகும்
(B) திறன் பயிற்சி திட்டத்தின் மூலம் நிதி தொடர்பான தடைகளை நீக்குவது இதன் குறிக்கோளாகும்
(C) இந்தியாவில் 34 லட்சம் இளைஞர்களுக்கு ரூ.50,000 முதல் 1.5 லட்சம் வழங்குவது இதன் பணியாகும்.
**(D) காஷல் பாரத் என்பது இதன் மழக்கமாகும்.**

198. ஹைட்ரஜனின் புதிய அமைப்பு (எதிர்மறை மின்னூட்டம் கொண்ட ஹைட்ரஜன் தொகுப்பு) எந்த நாட்டு இயற்பியல் அறிஞர்களால் உருவாக்கப்பட்டது?
(A) இந்தியா **(B) ஆஸ்திரியா** (C) ஆஸ்திரேலியா (D) சீனா

199. கவிக்கோ அறக்கட்டளையின் கவிக்கோ விருது 2017 ஆம் ஆண்டு ____________ வழங்கப்பட்டது.
**(A) கவிஞர் முத்துலிங்கம்**
(B) கவிஞர் வைரமுத்து
(C) கவிஞர் வாலி
(D) கவிஞர் விஜய

200. கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் கீழ் எத்தனை சதவீத நலிவடைந்த பிரிவைச் சார்ந்த குழந்தைகள் தனியார் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும்?
**(A) 25** (B) 26 (C) 27 (D) 28